சி.சி. 42/2019 நாள். 05.12.2022

அ.சா.2 திரு. செல்வராஜ்

சாட்சி மனுவின் பெயரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை:

1) நான் எனது மளிகை கடையை நானும் எனது மனைவியும் சேர்ந்து பார்த்துக்கொள்கிறோம். நான் குமரன் கார்டனில் கிரையம் பெற்றதாக சொல்லப்பட்டுள்ள சொத்திற்கு வழக்கறிஞர் அறிவுரை பெற்றேனா என்றால் இல்லை. 2008ம் ஆண்டில் 1ம் எதிரியிடமிருந்து ஞானசுந்தரபாண்டியன், சுரேஷ் இருவரும் சேர்ந்து கிரையம் வாங்கியதாக சொல்லியுள்ளதில் மூல பத்திரங்கள் தெரியுமா என்றால் மூல பத்திரங்கள் எதுவும் தெரியாது. அந்த இடம் 1ம் எதிரிக்கு பாத்தியப்பட்டது என்பது தெரியாது.
2) நான் கிரையம் பெறுவதற்கு முன்பு வில்லங்க சான்றிதழ் போட்டு பார்த்தேன். அந்த வில்லங்க சான்றிதழில் 1ம் எதிரியின் பெயர் இருந்தது. குமரன் கார்டனில் சம்பவ இடத்தை சுற்றி உள்ள இடங்களில் ஒரு வீடு மட்டும் உள்ளது. சம்பவ இடத்திற்கு 1ம் எதிரி வேலுச்சாமி கம்பிவேலி போட்டுயிருந்தார் என்றால் சரிதான். சம்பவத்தன்று நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது 12.00 மணி இருக்கும்.
3) சம்பவ இடத்தில் 1ம் எதிரி கம்பிவேலி போடுவதை குமரன் கார்டனில் போண்டா கடை வைத்திருக்கும் பாண்டியன் என்பவர் சொன்னார். நான் பல்லடத்திற்கு வந்துவிட்டு சம்பவ இடம் வழியாகத்தான் வேறொரு இடத்திற்கு சென்றேன். நான் பல்லடத்திற்கு வங்கியில் லோன் வாங்குவதற்கு மனு செய்வதற்காக நான் சென்றேன். பல்லடத்திற்கு நான் 10 மணிக்கு வந்துவிட்டேன். நான் எக்விடாஸ் என்ற வங்கியில் லோன் வாங்க சென்றேன். சம்பவத்தன்று யாரும் என்னுடன் வரவில்லை. போண்டா கடை வைத்திருக்கும் பாண்டியன் தகவல் சொன்னதை புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். இதுவரை போண்டா கடை வைத்திருக்கும் பாண்டியன் பற்றி சொல்லாமல் தற்போது சொல்கிறேன் என்றால் சரியல்ல.
4) சம்பவ இடத்தில் சம்பவத்தன்று கம்பிவேலி போடும் 10 நபர்களும் எதிரிகள் இருவரும் இருந்தார்கள். சம்பவத்தை சுற்றியிருந்தவர்கள் வேடிக்கை பார்த்தோம் என்றால் அவர்கள் கடற்பாரை மற்றும் கம்பியுடன் இருந்ததால் நான் ஒன்றும் செய்யவில்லை. வழக்கு சம்பவம் நடந்தவுடன் போலீசுக்கு போன் செய்தேன். பின்பு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று புகார் அளித்தேன். உண்மையில் நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் சம்பவ இடம் என்பது எதிரிகளுக்கு

பாத்தியப்பட்டது என்றாலும் பாத்தியமில்லாத நபர்களிடம் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. என்னை எப்போது போலீசார் விசாரித்தார்கள் என்றால் அன்றையதினம் 6 மணிக்கு விசாரித்தார்கள்.

5) நான் எனது முதல்விசாரணையில் சம்பவ தினத்திற்கு மறுநாள் மனைவியை விசாரித்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரிகள் எங்களை கொலை மிரட்டல் விடுத்ததற்கு பாதுகாப்பு வேண்டி போலீசாரிடம் மனு செய்தேனா என்றால் இல்லை. எங்களுக்கு இருவருக்கும் இடையேயான பிரச்சனை சிவில் பிரச்சனை என்றாலும் உரிய வழக்கு தாக்கல் செய்யாமல் போலீசாரிடம் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகள் மீது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2022.12.05 21:57:11 +0530

நீதித்துறை நடுவர்
பல்லடம்

சி.சி. 42/2019 நாள். 05.12.2022

அ.சா.1 திருமதி. சங்கீதா

சாட்சி மனுவின் பெயரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை:

1. நான் அருள்புரம், உப்பிலிபாளையத்தில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் இடத்திலிருந்து குமரன் கார்டனுக்கு சுமார் 5 கிலோமீட்டர் இருக்கும் என்றால் அதற்கு குறைவாக இருக்கும். குமரன் கார்டனிலிருந்து பல்லடம் காவல்நிலையம் சுமார்5 கிலோமீட்டர்இருக்கும். சம்பவ இடமானது 1ம் எதிரி வேலுச்சாமிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 2ம் எதிரி 1ம் எதிரியின் மகன் என்றால் சரிதான்.
2. 27.09.2015ம் தேதி காவல்நிலையத்தில் நான் புகார் அளித்தேன். அந்த புகாரில் நான் சைட் வாங்கியதாக சொல்லியிருப்பதில் சுரேஷ் என்பவரிடமிருந்து வாங்கினேன். 1ம் எதிரி தனது இடத்தை சைட் போட்டு விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். நான் இடத்தை வாங்குவதற்கு முன்பாக மூல ஆவணங்கள், மனையிட அங்கீகாரம், வில்லங்க சான்றிதழ் உள்ளிட்ட வை கொண்டு வழக்கறிஞர் அறிவுறுத்தலின் பேரில் பெற்றேனா என்றால் சுரேஷ் என்பவர் மூலம் வில்லங்க சான்றிதழ் எடுத்து பார்த்தேன்.
3. நான் வாங்கியபோது டிசிபி அப்ரூவல் உள்ளதா என்றால் சுரேஷ் என்பவர் என்னிடம் சொல்லவில்லை நானும் பார்க்கவில்லை. நான் கிரையம் பெற்ற இடம் ஏற்கனவே பிரச்சனையில் உள்ள இடம் என்று தெரியுமா என்றால் தெரியாது. சம்பவத்தன்று நானும் எனது கணவரும் எங்களது வண்டியில் மதியம் 12.30 மணிக்கு சம்பவ இடம் சென்றோம். நான் சென்று எனது கிரைய இடத்தை பார்க்கும்போது கம்பிவேலி எதுவும் போடப்படவில்லை. உண்மையில் 1ம் எதிரி சம்பவ இடத்தை கம்பிவேலி போட்டு அவரது சுவாதீனத்தில் வைத்திருந்தாரா என்றால் சரியல்ல.
4. சம்பவ இடத்தில் எதிரிகள் கம்பிவேலி போடுவதாக ஓயின்ஷாப் போய்வந்தவர்கள் என்னிடம் கூறிவந்ததாகவும் எனது புகாரில் கூறியுள்ளதில் யார் அவர்கள் என்றால் அவர்கள் விவரம் எனக்கு தெரியாது. அவர்கள் என்னிடம் நேரடியாக வந்து சொன்னார்கள். நேரடியாக எனக்கு தெரிவித்தார்கள் என்று எனது புகாரில் சொல்லியுள்ளேன். உண்மையில் புகாரில் சொல்லாமல் தற்போது வழக்கிற்காக நேரில் வந்து சொன்னதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
5. உண்மையில் எனக்கு தகவல் தெரிவிக்காததால்தான் அந்த நபர்களை இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் எனக்கு தெரியாது.

கம்பிவேலியை வேலுச்சாமி தான் அமைத்தார் என்றால் சரிதான். நான் வாங்கிய தற்கு முன்பு ஒரு ஞானசுந்தரபாண்டியன் என்பவர் கிரையம் பெற்றிருந்தார்.

6. 30.10.2008 ல் ஞானசுந்தரபாண்டியனும், வேலுச்சாமியும் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு கிரையம் ஒப்பந்தம் நிலுவையில் உள்ள நிலையில் பாத்தியம் இல்லாத சுரேஷ் என்பவரிடம் கிரையம் பெற்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7. சம்பவம் நடந்து 8 மணி நேரம் காலதாமதத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். உண்மையில் நான் சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றாலும், உண்மையான உரிமையாளர் 1ம் எதிரியிடமிருந்து இடத்தை கிரையம் பெறவில்லை என்றாலும் வேறொரு சுரேஷ் என்பவர் மூலம் வழக்கு சொத்தை கிரையம் பெற்றதாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
8. 1ம் எதிரி என்னை இருகைகளாலும் தள்ளினார். நான் மல்லாக விழுந்துவிட்டேன் என்றால் சரிதான். உண்மையில் நான் சொல்வது போல் 1ம் எதிரி என்னை தள்ளிவிடவில்லை என்றாலும் உண்மையில் நடந்திருந்தால் எனக்கு தலையின் பின்பகுதியில் அடிபட்டு இருக்கும் என்றாலும் எனது கணவர் தடுத்திருப்பார் என்றாலும் சரியல்ல. வழக்கு சம்பவத்தை 1ம் எதிரியிடம் வேலை பார்த்த நபர்கள் வேடிக்கை பார்த்தார்கள்.
9. என்னை கெட்ட வார்த்தையால் 1ம் எதிரி திட்டிய விவரம் அங்கிருந்தவர்களுக்கு தெரியும் என்றால் சரிதான். வழகடு உற்பத்தி செய்ய வேண்டுமென்பதற்காக 1ம் எதிரி பொய்யாக ஆபாச வார்த்தையால் திட்டினார் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவம் சுமார் ½ மணி நேரம் நடத்திருக்கும். அந்த நேரத்தில் அக்கம் பக்கத்தினர்கள் கூடிவிட்டார்கள் என்றால் சரியல்ல. அக்கம் பக்கம் உள்ளவர்கள் வேலைக்கு சென்றுவிட்டார்கள். உண்மையில் அவர்கள் அவர்கள் வேலைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல.
10. 1ம் எதிரி என்னை கொலை மிரட்டல் விடுத்ததால் நான் போலீஸ் அதிகாரியிடம் பாதுகாப்பு வேண்டுமென்று கேட்டேன். சம்பவ நடந்து அடுத்தநாள் சென்று கேட்டேன். பல்லடம் காவல்நிலையத்திற்கு சென்று வாய்மொழியாக உதவி ஆய்வாளரிடம் சொன்னேன். அவர் வெளியில் எங்கும் செல்ல வேண்டாமென்றும் பாதுக்காப்பாக இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள். 1ம் எதிரி மூன்று நாட்கள் தலைமறைவா கிவிட்டார். மேற்படி விவரங்களை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

11. சம்பவ இடத்தை கைப்பற்ற வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் நடக்காத சம்பவத்திற்கு பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இதுசம்மந்தமாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை. எதிரிகளுடனான நில பிரச்சனைக்கு சிவில் நீதிமன்றத்தில் வழக்கு போட்டுள்ளேனா என்றால் இல்லை. இதுசந்தமாக வட்டாட்சியரிடம் மனு கொடுத்தேன் என்றால் மனு எதுவும் கொடுக்கவில்லை.

12. நானும் எனது கணவரும், மற்ற சாட்சிகளுடன் எனக்கு காயத்தை உற்பத்தி செய்துகொண்டு பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2022.12.05 21:57:20 +0530

நீதித்துறை நடுவர்
பல்லடம்